# தமிழ் இலக்கியங்களில் சில புதிய பார்வைகள்

முனைவர்
இரா. செல்வக்கணபதி

தொல்காப்பியம் உள்ளீடு - அறிமுகம்



www.saivamonline.com

# Contact Details


www.saivamonline.com

www.facebook.com/saivamonline

@saivamonline Saivam Online

sspathipagam@gmail.com

+91 94440 21113

G Pay +91 94440 21113

UPI 9444021113@UPI




# 1. தொல்காப்பியம் உள்ளீடு - அறிமுகம்

தமிழ் மக்களுக்குத் தாய்மொழிப் பற்று மிகுதியும் உண்டு. தமிழ் மீது காதலும், ஓர் அதீத விருப்பமும் கொண்டவர்கள் தமிழர்கள். தங்கள் இனப் பெருமைக்குத் திருக்குறளையும், மொழித்தொன்மைக்குத் தொல்காப்பியத்தையும் முன்னிலைப்படுத்த அவர்கள் அறிந்திருக்கிறார்கள். மொழி உன்னதமானது, இனம் தொல்வரவு கொண்டது என்று மட்டும்தான் அவர்களுக்குத் தெரியுமே அன்றி, இவற்றிற்கு மூலமான தொன்னூல்கள் குறித்து அவர்களில் பலருக்கு ஒன்றுமே தெரியாது. இந்த வெற்றுணர்ச்சியும், மௌடீகக் காதலும் மொழி வளர்ச்சிக்கு ஒருகாலும் உதவுவன அல்ல.

---

*மொழி உன்னதமானது, இனம் தொல்வரவு கொண்டது என்று மட்டும்தான் அவர்களுக்குத் தெரியுமே அன்றி, இவற்றிற்கு மூலமான தொன்னூல்கள் குறித்து அவர்களில் பலருக்கு ஒன்றுமே தெரியாது.*

---

ஒரு வைதிக நெறியாளனுக்கு வேதம் தெரியும். அவற்றில் சில சுலோகங்களை அவன் கட்டாயம் கற்றிருப்பான். நம் கிறித்தவச் சகோதரர்களுக்கு, மூலநூல் வேதாகமம், ஏசுபிரான் அருளிய பைபிள் என்று நன்றாகவே தெரியும். புதிய ஏற்பாட்டிலேயோ அல்லது பழைய


www.saivamonline.com

ஏற்பாட்டிலேயோ இரண்டொரு திருவசனங்களை அவர்கள் கற்றிருப்பார்கள். இஸ்லாமிய சகோதரர்கள் கட்டாயம் குர்ரான் வாசகங்களைச் சொல்லத் தெரிந்திருப்பார்கள். ஆனால், ஒரு தமிழ் மகனுக்குத் தாய்மொழியின் மூலநூலும், முதல் நூலுமாகத் திகழும் தொல்காப்பியத்தில் ஒரு நூற்பா கூட தெரியாது. இதனை இகழ்ச்சியாக நான் குறித்திடவில்லை. மனவேதனையுடன் பதிவு செய்கிறேன்.

---

*ஒரு தமிழ் மகனுக்குத் தாய்மொழியின் மூலநூலும், முதல் நூலுமாகத் திகழும் தொல்காப்பியத்தில் ஒரு நூற்பா கூட தெரியாது.*

---

தொல்காப்பியத்தை அறிமுகப்படுத்தும் கல்விமுறை இங்கே இல்லை. யாராவது, இது உன்னதமானது என்றால், கிளிப்பிள்ளை போல் வழிமொழிய மட்டுமே நாம் கற்று வைத்திருக்கிறோம். அப்படித்தான் தொல்காப்பியம் என்ற நூற்பெயர் அறிமுகமாகியிருக்கிறது. இதனால்தான், தொல்காப்பியம் என்றால் என்ன? ஆசிரியர் யார்? அதன் உள்ளீடுகள் யாவை? அந்நூல் என்னதான் சொல்ல வருகிறது? இதனைச் சங்க கால இலக்கணம் என்கிறார்களே, சங்கம் என்றால் எனன? என்பனவற்றை எல்லாம் ஓரளவு படிப்பறிவுடைய நம் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ளட்டுமே என்ற நல்லெண்ணத்தில்தான் இக்கட்டுரையை எழுதுகின்றேன். முதலில் நம்மவர்களுக்கு நூல் அறிமுகமாகட்டும்; பின்னர் நூலின் நுட்பங்களை உரைக்கலாம் என்பதனால், சங்கத்தையும், நூலையும் மேலெழுந்தவாரியாக அறிமுகப்படுத்தவே முயன்றிருக்கிறேன். தொல்காப்பிய நுட்பங்கள் நூற்றுக்கணக்கில் அறிவேன். உரை வீச்சுக்களில் திளைத்தவன். அந்தப் புதிய பார்வைகளை, வேறு ஒரு நேரத்தில் பதிவு செய்வேன். தமிழர்கள் முதலில் தொல்காப்பியத்தைத் தெரிந்து கொள்ளட்டும். மீண்டும் தமிழ் தளிர்க்கும். அரும்பிப் பூக்கும். காய்த்துக் கனியாகும். அக்காலை, தொல்காப்பிய முழு எழிலையும் அவர்கள் மாந்தி மகிழ்வார்கள். இனி, தொல்காப்பியத்தில் ஒரு பயணம் தொடங்க அழைக்கிறேன்.

---

*முதலில் நம்மவர்களுக்கு நூல் அறிமுகமாட்டும்; பின்னர் நூலின் நுட்பங்களை உரைக்கலாம் என்பதனால், சங்கத்தையும், நூலையும் மேலெழுந்தவாரியாக அறிமுகப்படுத்தவே முயன்றிருக்கிறேன்.*

---



www.saivamonline.com

## இலக்கிய ஆராய்ச்சி

வரலாற்று ஆராய்ச்சிகள் பலதிறத்தன. இலக்கிய வரலாறு, மொழி வரலாறு, நாகரிகம் மற்றும் பண்பாட்டு வரலாறு, அரசியல் வரலாறு, சமூக வரலாறு என அவை பல வகைப்படும். தொல்காப்பியம் மேற்குறித்த பல்வகை வரலாறுகளுக்கும் துணை செய்யவல்லது. தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொருத்தவரை இலக்கியங்களின் தோற்றம், தோற்றத்திற்கான காரணங்கள், காலம், பாடியோர், நூலமைப்பு, இலக்கிய வரலாற்றில் அந்நூலுக்கு உரிய இடம், பிற்கால இலக்கியங்களின் மேல் அது விளைத்த தாக்கம் என்பன முற்றாக ஆராயப்பட வேண்டும். நூல் தரும் செய்திகளின் விளக்கமாக, நூல் அடைவுகளின் தொகுப்பாக இலக்கிய வரலாறுகள் அமைவது தவிர்க்கப்பட வேண்டும். அவை, நூல் பற்றிய திறனாய்வு ஆராய்ச்சிகளில் மேற்கொள்ளப்படலாம். வரலாற்றை நிறுவுவதற்குத் தேவையான அளவு, நூல் உள்ளீட்டில் கவனம் செலுத்துவதில் தவறு இல்லை.

*நூல் தரும் செய்திகளின் விளக்கமாக, நூல் அடைவுகளின் தொகுப்பாக இலக்கிய வரலாறுகள் அமைவது தவிர்க்கப்பட வேண்டும்.*

## ஓர் உதாரணம்

உதாரணத்திற்குத் திருக்குறளை எடுத்துக்கொள்ளலாம். அறநாட்டம் குறைந்து, கேளிக்கை நாட்டம் மிக்கிருந்த காலம் கடைச் சங்க காலம். அறிவு நிரம்பிய புலவர்கள் ஆட்சியாளர்களைச் சார்ந்தே வாழ்ந்தனர். கள்ளும், சூதும், பரத்தமை ஒழுக்கமும், வேத வேள்வியும், உயிர்க்கொலையும் அதுபற்றி வந்த புலால் உணவும் சமூகச் சீர் கேடுகளாகக் கருதப் பெறாது சமூகப் பெருமிதங்களாகச் சித்திரிக்கப் பட்ட காலம். தனி மனிதத் துதி மேலோங்கி ஒலித்தது. இச்சமூக வாழ்வின் மேல் கொண்ட கோபத்தில், அறஞ்சார்ந்த நெஞ்சம் கொண்ட சான்றோர் ஒருவரால் எவ்வித சமரசமும் செய்து கொள்ளப்படாது, எதிர்நீச்சல் இட்டு உருப்பெற்ற நூல் திருக்குறள் என்பது அதன் தோற்றம் பற்றிய ஆய்வாக அமைதல் வேண்டும். புற-அகச் சான்றுகளால் அதன் காலம் நிறுவப்பட வேண்டும். சங்க நூல்களுள் காணப்படாத குறள் என்ற யாப்பை அது முதன் முதல் போற்றிக் கொண்ட சிறப்பு அடையாளம் சுட்டப்பட வேண்டும்.



www.saivamonline.com

***அறநாட்டம் குறைந்து, கேளிக்கை நாட்டம் மிக்கிருந்த காலம் கடைச் சங்க காலம்.***

***அறஞ்சார்ந்த நெஞ்சம் கொண்ட சான்றோர் ஒருவரால் எவ்வித சமரசமும் செய்து கொள்ளப்படாது, எதிர்நீச்சல் இட்டு உருப்பெற்ற நூல் திருக்குறள் என்பது அதன் தோற்றம் பற்றிய ஆய்வாக அமைதல் வேண்டும்.***

திருக்குறளின் அதிகாரப் பகுப்பு, பாக்களின் எண்ணிக்கை, இயல் பாகுபாடு பற்றிச் சுருங்கச் சுட்டலாம். வருணத்துக்கு ஒரு நீதி என்ற சமகால வடமொழி அற நூல்களிலிருந்து அது மாறுபட்டு, மனித குலத்துக்கு ஒரே நீதி பேசுவதை அடையாளபப்டுத்தலாம். சங்க காலப் பரத்தமை பற்றிய ஊடலை வள்ளுவர் ஏற்கவில்லை என்பதை உள்ளீட்டுச் சான்றுகளோடு நிறுவலாம். மொழி, இனம், தனி மனிதர், ஊர் பெயர் சுட்டாத அதன் தனிச் சிறப்பை எடுத்துரைக்கலாம்.

***வருணத்துக்கு ஒரு நீதி என்ற சமகால வடமொழி அற நூல்களிலிருந்து அது மாறுபட்டு, மனித குலத்துக்கு ஒரே நீதி பேசுவதை அடையாளப்படுத்தலாம். சங்க காலப் பரத்தமை பற்றிய ஊடலை வள்ளுவர் ஏற்கவில்லை என்பதை உள்ளீட்டுச் சான்றுகளோடு நிறுவலாம்.***

மூன்றாவதாகப் பிற்கால, பல்வகை இலக்கியங்களின் மேல் அது விளைத்த தாக்கங்கள் இருக்குமானால் அவற்றை இனங்காட்டலாம். அகமும்-புறமுமாகவே தொடர்ந்த சங்க இலக்கியப் பாடல் போக்கில் நாலடியார் முதலிய அறநூல்களின் பயணங்கள் தொடங்குவதற்கு அது திருப்பு முனையாக அமைந்த திறம் பேசலாம். இப்படித்தாம் ஒவ்வொரு இலக்கியம் அல்லது இலக்கணம் பற்றிய வரலாற்று ஆய்வும் அமைதல் வேண்டும். இவ்வாறு முறைப்படுத்தப்பட்டே தொல்காப்பியம் குறித்த வரலாற்று ஆய்வு இங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுநாள்வரை தோன்றிய தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் பல. அவற்றுள் முற்றாக இம்முறை மேற்கொள்ளப்பெறாமை ஒரு குறையாகவே நிற்கிறது.

## தமிழ்ச் சங்கம்

உலகில் இன்று நின்று நிலவும் மொழிகள் பல. அவற்றுள் காலப் பழமை உடையன சில. அவற்றுள் ஒன்று தமிழ்மொழி. தமிழ்மொழி தோற்றம் கொண்ட காலம் இது என்பதை அறிய வாய்ப்பு இல்லை. முதலில்



www.saivamonline.com

மொழி பேசுவதற்குப் பயன்பட்டிருக்கும். காலப்போக்கில் எழுத்துக்களை உருவாக்கியிருப்பர். எழுத்து மொழி தோன்றிய பிறகு மக்கள் தம் சிந்தனைகளை மொழியில் பதிவு செய்ய விரும்பியிருப்பர். அக்காலத்தில்தான் இலக்கியங்கள் தோற்றம் கொண்டன. காலப்போக்கில் இலக்கியங்கள் பலவாக வளர்ந்தன. மனித குலச் சிந்தனைகளின் கருவூலங்களாக இலக்கியங்கள் திகழ்ந்தன. இவை இன்பம் தருவனவாக மட்டும் அமையாது, நாகரிகப் பதிவுகளையும், வரலாற்றுப் போக்குகளையும் வெளிப்படுத்தலாயின. மக்களால் பெரிதும் விரும்பப்பட்ட இலக்கியங்களை வளர்க்கும் பொறுப்பினை ஆட்சியாளர்கள் விரும்பி ஏற்றனர். புலமையாளர்கள் தம்முள் கூடி மொழியை வளர்த்தனர். பல்துறை இலக்கியங்கள் படைக்கப்பட்டன. மாமன்னர்கள் மொழி வளர்க்க நிறுவிய அமைப்புக்கள், சங்கம் என்று கூறப்பட்டன. தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பாண்டிய மன்னர்கள் பெரும்பங்கு ஆற்றினர். தமிழகத்தில் முதல், இடை, கடை என்று மூன்று சங்கங்கள் நிலவியிருந்து தமிழ் ஆய்ந்தன. தொல்காப்பியம், சங்க கால இலக்கியங்களுக்கு மேல் வரிச் சட்டமாக அமைந்துள்ளதால் தொடர்பு கருதி முச்சங்க வரலாறு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

---

*முதலில் மொழி பேசுவதற்குப் பயன்பட்டிருக்கும். காலப்போக்கில் எழுத்துக்களை உருவாக்கியிருப்பர். எழுத்து மொழி தோன்றிய பிறகு மக்கள் தம் சிந்தனைகளை மொழியில் பதிவு செய்ய விரும்பியிருப்பர். அக்காலத்தில்தான் இலக்கியங்கள் தோற்றம் கொண்டன.*

*புலமையாளர்கள் தம்முள் கூடி மொழியை வளர்த்தனர். பல்துறை இலக்கியங்கள் படைக்கப்பட்டன. மாமன்னர்கள் மொழி வளர்க்க நிறுவிய அமைப்புக்கள், சங்கம் என்று கூறப்பட்டன.*

---

## இறையனார் களவியல்

தமிழில் இன்றுவரை நின்று நிலவும் இலக்கண நூல் தொல்காப்பியம். இதற்குப் பின், பொருளதிகாரத்தின் ஒரு பகுதியை மட்டும் விளக்கி ஒரு சிறு நூல், இறையனார் என்பவரால் படைக்கப்பட்டது. இறையனார் களவியல் என்பது பெயர். இந்நூலுக்கு நக்கீரர் என்பார் உரை கண்டுள்ளார். இவ்வுரையில்தான் முதன் முதலாகத்



www.saivamonline.com

தமிழ் வளர்த்த சங்கங்களைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கடைச்சங்க இலக்கியங்களாகிய கலித்தொகை, புறநானூறு, மதுரைக் காஞ்சி, சிறுபாணாற்றுப்படை, தமிழ்க் காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம், சைவ சமய இலக்கியங்களாகிய திருநாவுக்கரசர் தேவாரம், மாணிக்கவாசகரின் திருக்கோவையார், மற்றும் சின்னமன்னூர்ச் செப்பேடுகள் முதலியனவற்றுள் தமிழ்ச் சங்கங்கள் பற்றிய அரிய குறிப்புகள் காணப்படுகின்றன. பாண்டியர்கள் சங்கங்களை நிறுவி வளர்த்தமை; சங்கம் நிலவியிருந்த பெருநகரங்கள்; முதலிரு சங்கங்கள் நிலவிய நகர்கள் கடல்கோள்களால் அழிந்தமை முதலியன மேற்குறித்த நூல்களுள் பதிவு செய்யப்பட்டுள்ளன. என்றாலும், தமிழ்ச் சங்கங்கள் பற்றிய விரிவான செய்திகளை அவற்றிலிருந்து பெற முடியவில்லை. இறையனார் களவியல் உரையே சற்றே விரிவான செய்திகளைத் தருகின்றது.

---

*கடைச்சங்க இலக்கியங்களாகிய கலித்தொகை, புறநானூறு, மதுரைக் காஞ்சி, சிறுபாணாற்றுப்படை, தமிழ்க் காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம், சைவ சமய இலக்கியங்களாகிய திருநாவுக்கரசர் தேவாரம், மாணிக்கவாசகரின் திருக்கோவையார், மற்றும் சின்னமன்னூர்ச் செப்பேடுகள் முதலியனவற்றுள் தமிழ்ச் சங்கங்கள் பற்றிய அரிய குறிப்புகள் காணப்படுகின்றன.*

---

## தலைச் சங்கம்

முதற்சங்கத்தைத் தலைச்சங்கம் என நக்கீரர் குறித்துள்ளார். தலைச்சங்கத்தில் அகத்தியர், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் (சிவபெருமான்), குன்றெறிந்த முருகவேள் (முருகப்பெருமான்), முரிஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் (குபேரன்) என்பவர்கள் முதலாக 549 புலவர்கள் தலைமை நிலை பெற்றிருந்தனர். இப்புலவர்கள் உட்பட்ட 4449 புலவர்கள் தலைச்சங்கத்தில் பங்கேற்று நூல்கள் வடித்தனர். இவர்களால் ஆக்கப்பட்ட நூல்களுள் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்பன குறிக்கத்தக்கன. தலைச்சங்கம் 4440 ஆண்டுக்காலம் நடைபெற்றிருந்தது. இச்சங்கத்தை முதலில் தோற்றுவித்த பாண்டிய மன்னன் காய்சின வழுதி என்பவன். அவன் காலம் முதல் கடுங்கோன் என்ற மன்னன் காலம் வரை தலைச் சங்கத்தை 89 மன்னர்கள் வழி நடத்திச் சென்றுள்ளனர். தலைச் சங்கத்தைப் புரந்த பாண்டிய



www.saivamonline.com

மன்னர்களுள் தமிழ்ப் புலமை மிக்கவர்களாக ஏழு பேர் திகழ்ந்திருந்தனர். இன்றைய குமரி முனைக்குத் தெற்கே விரிந்து கிடந்த இலெமூரியா பகுதியில் திகழ்ந்திருந்த மதுரை என்ற நகரில் தலைச்சங்கம் நிலவியிருந்துள்ளது. அம் மதுரை கடல் கொண்டு அழிந்து போய்விட்டது. தலைச்சங்கப் புலவர்கள் அகத்தியம் என்ற இலக்கண நூலை முதல் நூலாகக் கொண்டு தம் இலக்கியங்களைப் படைத்தனர்.

*இன்றைய குமரி முனைக்குத் தெற்கே விரிந்து கிடந்த இலெமூரியா பகுதியில் திகழ்ந்திருந்த மதுரை என்ற நகரில் தலைச்சங்கம் நிலவியிருந்துள்ளது. அம் மதுரை கடல் கொண்டு அழிந்து போய்விட்டது.*

### தலைச்சங்கம் - வரலாற்றுப் பார்வை

மேற்குறித்த உரையில் காணப்படும் தலைச்சங்கம் குறித்த செய்திகள், எவ்வாறு திரட்டப்பட்டன என்பதை அறியச் சான்றுகள் கிடைத்தில. இச்செய்திகளை வழி மொழிந்து பின் வந்த நூலாசிரியர்களும்,உறுதியான சான்றுகளை வழங்கவில்லை.

*சிவபெருமான், முருகன் முதலிய கடவுளர்கள் தலைச்சங்கத்தின் தலைமை ஏற்றிருந்தனர் என்பது வியப்பூட்டுவதாக அமைகிறது. தமிழ்மொழிக்கும், சங்கம் என்ற அமைப்பிற்கும் பெருமை சேர்க்க விரும்பி இவை கூறப்பட்டிருக்கலாம்.*

சிவபெருமான், முருகன் முதலிய கடவுளர்கள் தலைச்சங்கத்தின் தலைமை ஏற்றிருந்தனர் என்பது வியப்பூட்டுவதாக அமைகிறது. தமிழ்மொழிக்கும், சங்கம் என்ற அமைப்பிற்கும் பெருமை சேர்க்க விரும்பி இவை கூறப்பட்டிருக்கலாம். தலைச்சங்க நூல்களாகக் குறிக்கப்படுவனவற்றுள் ஒன்றும் இன்று இல்லை. இவை, எவை குறித்து எழுந்தன என்பதோ, என்ன யாப்பில் பாடப்பெற்றன என்பதோ அறியக் கூடவில்லை. பரிபாடல் என்பது ஒரு பாவகை. அந்த யாப்பில் அமைந்த சில பாடல்களின் தொகுப்பு, பரிபாடல் என்ற பெயரில் கடைச் சங்கநூல்களுள் ஒன்றாகக் கிடைத்துள்ளது. தொல்காப்பியத்திற்கு முற்பட்ட இலக்கண நூலாக, அகத்தியத்தைப் பின்வந்தவர்களும் குறித்துள்ளனர். அகத்திய நூற்பாக்கள் என்ற பெயரில் சில நூற்பாக்களை உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ளனர். தலைச் சங்கம் நிலவியிருந்த பழைய மதுரை கடல் கோளால் அழிந்தது என்பதற்குச் சில



www.saivamonline.com

சான்றுகள் கிடைத்துள்ளன. நக்கீரர் உரை வரலாற்றுக்கு ஏற்புடையது என்பது உறுதியானால் இன்றைக்கு 12000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழி உயரிய வளர்ச்சி பெற்றிருந்துள்ளது என்பதை உறுதி செய்ய இயலும்.

*நக்கீரர் உரை வரலாற்றுக்கு ஏற்புடையது என்பது உறுதியானால் இன்றைக்கு 12000 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழி உயரிய வளர்ச்சி பெற்றிருந்துள்ளது என்பதை உறுதி செய்ய இயலும்.*

## இடைச் சங்கம்

இரண்டாவதாக அமைக்கப்பட்ட தமிழ்ச் சங்கத்தை நக்கீரர் உரை, இடைச் சங்கம் எனக் குறிப்பிடுகிறது. இச்சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க் கருங்கோழி மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன்மாறன், துவரைக்கோமான், கீரந்தை முதலாகிய 59 பெரும் புலவர்கள் தலைமை பெற்று விளங்கினர். இவர்கள் உட்பட 3700 புலவர்கள் இடைச்சங்கத்தில் பங்கேற்று நூல்கள் யாத்துள்ளனர். இச்சங்கத்தில் குருகு, வெண்டாளி, வியாழ மாலை அகவல் முதலிய அரிய நூல்கள் தோன்றின. இடைச் சங்கப் புலவர்களுக்கு மேல் வரம்பாக அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூத புராணம் என்ற நூல்கள் திகழ்ந்துள்ளன. இடைச் சங்கம் 3700 ஆண்டுகள் நிலவியிருந்தது. இடைச்சங்கத்தை வெண்தேர்ச்செழியன் அமைத்தான். அவன் முதல், முடத் திருமாறன் வரை 59 பாண்டிய வேந்தர்கள் இடைச்சங்கத்தைப் புரந்துள்ளனர். மன்னர்களுள் 5 பேர் கவிபாடும் வல்லமை பெற்றிருந்தனர். இடைச்சங்கம் கபாடபுரம் என்ற நகரில் நடைபெற்றுள்ளது. இந்நகரத்தையும் கடல் கொண்டது.

*இடைச் சங்கப் புலவர்களுக்கு மேல் வரம்பாக அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசை நுணுக்கம், பூத புராணம் என்ற நூல்கள் திகழ்ந்துள்ளன.*

## நக்கீரர் - உரை - ஆய்வு

இடைச்சங்க நூல்களுள் தொல்காப்பியம் ஒன்று மட்டுமே கிடைத்துள்ளது. அகத்தியர் இரண்டு சங்கங்களிலும் தலைமை ஏற்றார்



www.saivamonline.com

என்பது ஆராயப்பட வேண்டியுள்ளது. மாபுராணம், பூதபுராணம் எனபனவற்றில் வரும் புராணம் என்ற சொல், பழைய வரலாறு என்ற பொருள்தரும் ஒரு வடசொல். இவையும், இசை நுணுக்கமும் எப்பொருள் குறித்து எழுந்தன என்பதை அறிய முடியவில்லை. இடைச்சங்கம் குறித்த நக்கீரர் தரும் குறிப்புகளை உறுதி செய்வதற்குப் பின்வந்த நூல்களில் குறிக்கத்தக்க சான்றுகள் கிடைத்தில. என்றாலும், நக்கீரர் உரையை முற்றிலுமாகக் கற்பனை என்று புறக்கணிக்கவும் முடியவில்லை. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட பதிவுகளை, வேறு ஒரு பதிவின் மூலம் உறுதி செய்த பிறகே நம்ப வேண்டும் என்று விதி ஏதும் இல்லை. எனவே, முற்றிலுமாக ஏற்காவிட்டாலும், இடைச்சங்கம் என்ற ஓர் அமைப்பு நிலவியிருந்தது என்பதை ஏற்பதில் தடை இல்லை. வரலாற்றைப் பதிவு செய்து பாதுகாக்கும் பழக்கம் தமிழர்களிடையே நிலவியிருக்கவில்லை. ஏட்டுச் சுவடிகளைப் பாதுகாப்பதில் ஏராளமான சங்கடங்கள் உண்டு. கடல் கோள் வேறு நிகழ்ந்துள்ளது. இவற்றை உற்றுநோக்கும்போது நக்கீரர் தரும் சிறு வெளிச்சத்தையும் கட்டுக்கதை என்று புறந்தள்ள இயலவில்லை.

***நக்கீரர் உரையை முற்றிலுமாகக் கற்பனை என்று புறக்கணிக்கவும் முடியவில்லை. 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட பதிவுகளை, வேறு ஒரு பதிவின் மூலம் உறுதி செய்த பிறகே நம்ப வேண்டும் என்று விதி ஏதும் இல்லை.***

## கடைச்சங்கம்

மூன்றாவதாக அமைந்த சங்கத்தை, இறையனார் களவியல் உரை கடைச்சங்கம் என்று குறிப்பிடுகிறது. இச்சங்கத்தில் சிறு மேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடை அரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார், மதுரை மருதன் இளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்போர் சிறப்புற வீற்றிருந்து தமிழ் ஆய்ந்துள்ளனர். இவ்வாறான தலைமை ஏற்றோர் நாற்பத்து ஒன்பதின்மர். பாடிய புலவர்கள் 449 பேர். கடைச் சங்க காலத்தில் எழுந்த நூல்கள் நெடுந்தொகை நானூறு (அகநானூறு), குறுந்தொகை, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி (கலித்தொகை), எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலாகிய பலவாகும். கடைச்சங்கப் புலவர்களுக்கு இலக்கணமாக

அகத்தியமும் தொல்காப்பியமும் விளங்கின. கடைச்சங்கம் 1850 ஆண்டுகள் நிலவியிருந்தது. கடைச்சங்கத்தை முடத் திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்து ஒன்பது பாண்டிய மன்னர்கள் புரந்துள்ளனர். இவர்களுள் மூவர் புலமை நலம் மிக்கவர்களாகத் திகழ்ந்துள்ளனர். கடைச் சங்கம் இன்றுள்ள மதுரையில் நிலவியிருந்தது. களவியல் உரை இந்நகரை உத்தர மதுரை என்று குறிப்பிடுகிறது.

---

***கடைச் சங்க காலத்தில் எழுந்த நூல்கள் நெடுந்தொகை நானூறு (அகநானூறு) குறுந்தொகை, நற்றிணை நானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி (கலித்தொகை), எழுபது பரிபாடல், கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலாகிய பலவாகும்.***

---

## கடைச்சங்கம் - வரலாற்று ஆய்வு

கடைச்சங்க நூல்களாக இறையனார் களவியல் உரை குறிக்கும் நூல்களுள் கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை என்பன இன்று இல்லை. இவ்வுரை எட்டுத்தொகை நூல்களுள் யாவற்றையும் குறிப்பிட்டுப் பத்துப்பாட்டைக் குறிப்பிடாமை ஏன் என்பது விளங்கவில்லை. கடைச்சங்க காலத்தில் நிலவியிருந்த அகத்தியமும் அழிந்து போய்விட்டது. கடைச்சங்க காலத்தில் பல்வேறு புலவர்களால், பல்வேறு இடங்களில் பாடப்பட்ட தனிப்பாடல்கள் தொகுக்கப்பட்ட பிறகே இவ்வுரை தோன்றியுள்ளது என்பது தெரிகிறது. எனவே, இவ்வுரையாசிரியர் திருமுருகாற்றுப படையையும், பத்துப் பாட்டிலும், எட்டுத்தொகையிலும் பல பாடல்களைப் பாடியுள்ளவருமாகிய மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரராக இருக்க வாய்ப்பு இல்லை. அவர் பெயரில் பிற்காலத்தே வாழ்ந்திருந்த ஒருவர் இவர் என்று கொள்வதே ஏற்புடையது. முச்சங்க வரலாறு இவ்வாறு விரித்துரைக்கப்பட்ட போதிலும், இன்று கிடைத்துள்ள கடைச்சங்க நூல்களுள், சங்கம் என்ற சொல் இடம் பெறவில்லை. எனினும், தமிழ் வளர்த்த அமைப்பு ஒன்று மதுரையில் நிலைபெற்றிருந்தது என்ற குறிப்புகள் அங்கே காணப்படுகின்றன. மூவர் தேவாரம், நாலாயிரத்திவ்ய பிரபந்தம், திருக்கோவையார், சின்னமன்னூர்ச் செப்பேடு முதலியவற்றில், சங்கம் என்ற சொல் காணப்படுகிறது.


www.saivamonline.com

*இன்று கிடைத்துள்ள கடைச்சங்க நூல்களுள், சங்கம் என்ற சொல் இடம் பெறவில்லை. எனினும், தமிழ் வளர்த்த அமைப்பு ஒன்று மதுரையில் நிலைபெற்றிருந்தது என்ற குறிப்புகள் அங்கே காணப்படுகின்றன. மூவர் தேவாரம், நாலாயிரத் திவ்யபிரபந்தம், திருக்கோவையார், சின்னமன்னூர்ச் செப்பேடு முதலியவற்றில், சங்கம் என்ற சொல் காணப்படுகிறது.*

## தொல்காப்பியம்

முதற்சங்கம் மற்றும் இடைச்சங்க நூல்களாக நக்கீரர் குறிப்பிடுவனவற்றுள் இன்று முழுமையாகக் கிடைத்துள்ள ஒரே நூல் தொல்காப்பியம் மட்டுமே. முத்தமிழில் ஒன்றாகிய இயல் தமிழ் இலக்கணம் கூறும் நூல் இது. அகத்தியரின் 12 மாணாக்கர்களுள் ஒருவர் தொல்காப்பியர். இவரொடு உடன் கல்வி கற்ற பனம்பாரனார் என்பவர் தொல்காப்பியத்திற்கு ஒரு பாயிரம் வழங்கியுள்ளார். இத்தொல்காப்பியம் இயல் தமிழ் இலக்கணத்தை எழுத்திலக்கணம், சொல் இலக்கணம், பொருள் இலக்கணம் என்று மூன்று பகுதிகளாக ஆராய்ந்துள்ளது. இவற்றை அதிகாரம் எனக் குறிப்பது மரபு. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது ஒன்பது உட்பிரிவுகளைக் கொண்டுள்ளன. உட்பிரிவுகளை இயல்கள் என்று குறிப்பிடுவர். தொல்காப்பியம் 27 இயல்களையும், இலக்கணத்தை விரித்துக் கூறும் 1585 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. சில நூற்பாக்கள் பிரித்து எண்ணிக்கை தரப்பட்டுள்ளதால் 1610 வரை நீள்கிறது. நூற்பாவைப் பின்வந்தோர் சூத்திரம் என்று உரைத்தனர். இதன் காலம் பற்றிய கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. இறுதியாக நடத்தப்பட்ட ஆய்வுகளால் தொல்காப்பியம் கி.மு.4ஆம் நூற்றாண்டிற்கும், 7 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியிருக்கலாம் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

*இதன் காலம் பற்றிய கருத்து வேறுபாடுகள் பல உள்ளன. இறுதியாக நடத்தப்பட்ட ஆய்வுகளால் தொல்காப்பியம் கி.மு.4ஆம் நூற்றாண்டிற்கும், 7 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றியிருக்கலாம் என உறுதி செய்யப்பட்டுள்ளது.*

## சிறப்புப்பாயிரம்

தொல்காப்பியத்தின் முதற்கண் அமைந்துள்ள பனம்பாரனாரின் சிறப்புப் பாயிரம், தொல்காப்பியம் பற்றிய சில அரிய குறிப்புக்களைத் தருகிறது. இப்பாயிரம், வடவேங்கடம் தென்குமரி என்று தொடங்கி 15 அடிகளில் நீண்டு நிறைகிறது. இதன்வழி, வடக்கில் வேங்கடமும், தெற்கில் குமரிமுனையுமாகிய நிலப்பரப்பில் தமிழ் வழங்கியிருந்தமை தெரிகிறது. இந்நூல் தமிழ் மொழியை உலகத்தார் பேச்சு வழக்கு, கவிஞர்களின் செய்யுள் வழக்கு என்ற இரண்டு பகுதிகளையும் களமாக அமைத்துக்கொண்டு ஆராய்ந்துள்ளமை புலனாகிறது. எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பகுப்புக்களைப் பாயிரம் இனம் காட்டுகிறது. இந்நூல் நிலந்தரு திருவின் பாண்டியன் அவையில், அதங்கோட்டாசான் என்ற தலைமைப் புலவனுக்கு முன்னாக அரங்கேற்றப்பட்டுள்ளது. தொல்காப்பியர் ஐந்திரம் என்ற நூலில் மிகுந்த புலமை மிக்கவராகத் திகழ்ந்துள்ளார். அவர் காலத்துக்கு முற்பட்ட நூல்களுள் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும் வேறு பிரித்து அறிய முடியாது பின்னி உரைக்கப்பட்டிருந்தன. தொல்காப்பியர் இம்மயக்கத்தை நீக்கி எழுத்திலக்கணத்தைக் குழப்பம் இன்றி விரித்துரைத்தார்.

---

*அவர் காலத்துக்கு முற்பட்ட நூல்களுள் எழுத்திலக்கணமும், சொல்லிலக்கணமும் வேறு பிரித்து அறிய முடியாது பின்னி உரைக்கப்பட்டிருந்தன. தொல்காப்பியர் இம்மயக்கத்தை நீக்கி எழுத்திலக்கணத்தைக் குழப்பம் இன்றி விரித்துரைத்தார்.*

---

## எழுத்ததிகாரம்

முதற்கண்ணதாகிய எழுத்ததிகாரத்தில் 1. நூன் மரபு, 2 . மொழி மரபு, 3. பிறப்பியல், 4. புணரியல், 5. தொகை மரபு, 6.உருபியல், 7.உயிர் மயங்கியல், 8.புள்ளி மயங்கியல், 9.குற்றியலுகரப் புணரியல் என்ற ஒன்பது உட்பிரிவுகள் அமைந்துள்ளன. உரையாசிரியர் இளம்பூரணர் கருத்துப்படி எழுத்ததிகாரத்தில் 483 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

---

*பொதுவாக மொழி, இரண்டு வகைப்படும். பேச்சு மொழி, எழுத்து மொழி என்பன அவை. என்றாலும், தொல்காப்பியத்தில் பேச்சு மொழி பற்றியே அதிக இலக்கண வரையறைகள் பேசப்பட்டுள்ளன.*

---


www.saivamonline.com

பொதுவாக மொழி, இரண்டு வகைப்படும். பேச்சு மொழி, எழுத்து மொழி என்பன அவை. என்றாலும், தொல்காப்பியத்தில் பேச்சு மொழி பற்றியே அதிக இலக்கண வரையறைகள் பேசப்பட்டுள்ளன. எழுத்ததிகாரத்தில் தனிநிற்கும் எழுத்துக்கள் பற்றியும், சொற்களின் இடையே இடம் பெறும் எழுத்துக்கள் பற்றியும், சொற்கள் ஒன்றுடன் ஒன்று சேரும்போது ஏற்படும் எழுத்துக்களின் ஒலி மாற்றங்கள் குறித்தும் விரிவான செய்திகள் கூறப்பட்டுள்ளன.

## நூன் மரபும் மொழி மரபும்

முதலாவதாகிய நூன் மரபில் தமிழின் முதல் எழுத்துக்கள் உயிரும் உடம்பும் என முப்பது மட்டுமே என்று கூறப்பட்டுள்ளது. சார்பெழுத்துக்கள் மூன்று. எழுத்துக்கள் குறில், நெடில் என இருவகைப்படும். எழுத்துக்களின் ஓசை அளவு, மாத்திரை என்று குறிக்கப்பட்டுள்ளது.மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும். எழுத்துக்கள் ஒரு வகைப் பயன்பாடு கருதிச் சுட்டு, வினா என்றும் குறிக்கப்படும். சில எழுத்துக்களின் வரி வடிவம் பற்றியும் இங்கே விளக்கப்பட்டுள்ளது.

*எழுத்துக்கள் பொருள் தரும் நிலையில் ஓரெழுத்து ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி, இரண்டெழுத்துக்களுக்கு மேற்பட்ட எழுத்துக்களால் அமையும் தொடர் மொழி என மூன்று வகைப்படும்.*

உயிர்மெய் எழுத்துக்களின் ஒலி வடிவம் மற்றும் வரி வடிவம் குறித்தும் நூன் மரபு விளக்கி நிறைகிறது. மொழியிடை வரும் எழுத்துக்களின் இலக்கணம் மொழி மரபில் கூறப்பட்டுள்ளது. அளபெடைகள் பற்றிய விளக்கங்களும் இப்பகுதியில் உள்ளன. எழுத்துக்கள் பொருள் தரும் நிலையில் ஓரெழுத்து ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி, இரண்டெழுத்துக்களுக்கு மேற்பட்ட எழுத்துக்களால் அமையும் மொழி என மூன்று வகைப்படும். ஓரெழுத்து நிற்க வேண்டிய இடத்தில் வேறு ஓர் ஒத்த ஓசையுடைய எழுத்து நின்று அதே பொருளைத் தருவதைப் போலி என மொழி மரபு சுட்டுகிறது. மேலும் இப்பகுதியில் தமிழ்ச்சொற்களின் முதலிலும், இறுதியிலும் நிற்கும் எழுத்துக்கள் இவை இவை என்பதும் துல்லியமாக ஆராய்ந்து சுட்டப்பட்டுள்ளன.



www.saivamonline.com

## புணர்ச்சி இலக்கணம்

எழுத்துக்கள் பிறக்கும் முறைமை மூன்றாவதாகிய பிறப்பியலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. தமிழ் எழுத்துக்கள் பிறப்பதற்குத் தலை, கழுத்து, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் (வாயின் மேல்பகுதி) என்ற எட்டு உறுப்புக்களும் துணைசெய்கின்றன. நான்காவதாகிய புணரியல் ஒரு சொல்லும், பிறிதோர் சொல்லும் சேரும்போது இடையே நின்ற எழுத்துக்களில் ஏற்படும் ஒலி மாற்றங்கள் குறித்துப் பொதுப்படப் பேசுகிறது. பலவகை புணர்ச்சி விதிகளைத் தொகுத்துக் கூறுவது தொகை மரபு. தமிழில் பொருள் வேற்றுமை செய்யும் இடைச் சொற்களுக்கு வேற்றுமை உருபுகள் என்று பெயர். இரண்டு முதல் ஏழு வரையிலான வேற்றுமை உருபுகள், இரண்டு சொற்களுக்கு இடையில் வரும்போது ஏற்படும் ஒலித்திரிபுகளை உருபியல் எடுத்துக்காட்டுகிறது.

---

*2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் உலகில் எந்த ஒரு மொழியிலும் தொல்காப்பியத்தைப் போல் துல்லியமாக எழுத்திலக்கணம் உரைத்திடும் நூல்கள் தோன்றியிருக்கவில்லை என்பது தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பதாகும்.*

---

## மூன்று புணரியல்கள்

மேற்குறித்த இயல்களில் பொதுப்படப் புணர்ச்சி இலக்கணம் பேசிய தொல்காப்பியர், இறுதி மூன்று இயல்களில் புணர்ச்சியின்போது ஏற்படும் ஒலி மாற்றங்களைத் தனித்தனியே, மூன்று இயல்களில் விரித்துப் பேசுகிறார். இரண்டு சொற்கள் சேர்ந்து ஒரு தொடராகும்போது, முதல் வரும் சொல்லின் இறுதியில் உயிரெழுத்து நின்று, வரும் சொல்லோடு கூடும்போது ஏற்படும் திரிபுகள் உயிர் மயங்கியலில் பேசப்படுகிறது. மெய் எழுத்து அவ்வாறே நின்று கூடும்போது ஏற்படும் திரிபுகள் புள்ளி மயங்கியலில் விரித்துரைக்கப்படுகிறது. முன்வரும் சொல்லின் இறுதி எழுத்து உயிராகவும் இல்லாமல், மெய்யாகவும் இல்லாமல், நாகு, வரகு என்பன போன்று குற்றியலுகரமாக இருந்தால் ஏற்படும் திரிபுகள் குற்றியலுகரப் புணரியலில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் உலகில் எந்த ஒரு மொழியிலும் தொல்காப்பியத்தைப் போல் துல்லியமாக எழுத்திலக்கணம் உரைத்திடும் நூல்கள் தோன்றியிருக்கவில்லை என்பது தமிழ் மொழிக்குப் பெருமை சேர்ப்பதாகும். எழுத்ததிகாரத்திற்கு உரையாசிரியர் என்ற பெயரை



www.saivamonline.com

உடைய இளம்பூரணர் என்பவரும், நச்சினார்க்கினியர் என்பவரும் சிறந்த உரைகள் வரைந்துள்ளனர். அவை அளப்பரிய பெருமைமிக்க உரைகளாகத் திகழ்கின்றன.

## சொல்லதிகாரம்

தொல்காப்பியத்தின் இரண்டாவது பகுதி, சொல்லதிகாரம் ஆகும். இதன் முதன் இயல் கிளவியாக்கம். கிளவி என்ற பழந்தமிழ்ச் சொல்லிற்குச், சொல் என்பதே பொருள். கிளவியாக்கம் என்றால் சொற்களை உருவாக்கும் முறை என்பது. தனிச்சொற்களும், சொற்கள் இணையும் தொடர்களும எவ்வாறு அமைய வேண்டும் என்ற பொதுவர்ன வரையறைகளைக் கிளவியாக்கம் எடுத்துரைக்கிறது. சொற்களின் இலக்கணம், அவை உணர்த்தும் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப, உயர்திணைச் சொல் என்றும் அஃறிணைச் சொல் என்றும் இரண்டு வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. உயர்திணைச் சொற்கள் ஆண்பால், பெண் பால், பலர் பால் என மூன்றாகவும், அஃறிணைச் சொற்கள், ஒன்றன்பால், பலவின் பால் என இரண்டாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இன்ன ஈறுகளைக் கொண்டிருப்பவை இன்னபால் சொல் என்று கண்டறியக் கிளவியாக்கம் வழிகாட்டுகிறது. அடுத்துச் சொற்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து தொடராகும் நிலையில், ஏழு வகையான பிழை(வழு)கள் வாராது அமைப்பதற்கு வழி காட்டப்பட்டுள்ளது. வேறு வகையான சில வகைத் தொடர்கள் அமையும் முறைமையும் கிளவியாக்கத்தில் கூறப்பட்டுள்ளது. ஒருவகையில், கிளவியாக்கம், இடையில் வேற்றுமை உருபுகள் வாராது சொற்கள் தொடரும் அல்வழித் தொடர் இலக்கணம் கூறுவதாகவே காணப்படுகிறது.

*ஒருவகையில், கிளவியாக்கம், இடையில் வேற்றுமை உருபுகள் வாராது சொற்கள் தொடரும் அல்வழித் தொடர் இலக்கணம் கூறுவதாகவே காணப்படுகிறது.*

## வேற்றுமைத் தொடர்கள்

தமிழ் மொழியில் வேற்றுமை உருபுகள் நுண்ணிய பொருள் மாற்றங்களைச் செய்யும் ஆற்றல் பெற்று விளங்குகின்றன. தமிழில் ஒன்று முதல் எட்டு வரை, எட்டு வேற்றுமைகள் உள்ளன. முதல் வேற்றுமை என்பது, பெயர் குறித்து வருவது. எட்டாம் வேற்றுமை, விளி வேற்றுமை எனப்படும். இவ்விரண்டிற்கும் தனியே உருபுகள் இல்லை. இரண்டு முதல் ஏழு வரையிலான வேற்றுமைகளுக்கு உரிய உருபுகள் குறித்தும்,



www.saivamonline.com

அவை தொடரில் இணையும்போது ஏற்படுத்தும் பொருள் மாற்றங்கள் குறித்தும், வேற்றுமை இயல் எடுத்துரைக்கிறது. வேற்றுமை உருபுகள் நீண்ட வடிவுடைய சொற்களின் தேய்ந்து சுருங்கிய பொருள் பொதிந்த வடிவங்களாகும். இவை ஓர் எழுத்து அல்லது ஓர் அசையாகவே காணப்படுகின்றன. இவற்றை எழுத்து என்றோ அசை என்றோ சுட்டாது இடைச்சொல் என்று ஒருவகைச் சொல்லாகவே தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தமிழ் மொழியின் பெருமைக்கும், காலப் பழமைக்கும் வேற்றுமை உருபுகள் சான்று கூறி நிற்கின்றன.

*வேற்றுமை உருபுகள் நீண்ட வடிவுடைய சொற்களின் தேய்ந்து சுருங்கிய பொருள் பொதிந்த வடிவங்களாகும். இவை ஓர் எழுத்து அல்லது ஓர் அசையாகவே காணப்படுகின்றன. இவற்றை எழுத்து என்றோ அசை என்றோ சுட்டாது இடைச்சொல் என்று ஒருவகைச் சொல்லாகவே தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தமிழ் மொழியின் பெருமைக்கும், காலப் பழமைக்கும் வேற்றுமை உருபுகள் சான்று கூறி நிற்கின்றன.*

## உருபுப் புணர்ச்சிகள்

எடுத்துக்காட்டாக, இராமன் அடித்தான் என்பது முதல் வேற்றுமை எழுவாய்த் தொடர். இவ்விரு சொற்களுக்கும் இடையே, ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு இடை வந்தால், தொடரின் பொருளே தலைகீழாக மாறிவிடுகிறது. இராமனை அடித்தான் என்ற இரண்டாம் வேற்றுமைத் தொடரில் ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு அடித்த இராமனை, அடிபட்ட இராமனாகப் பொருள் மாற்றம் செய்து விடுகிறது. சிறுசிறு மாற்றங்கள் வழிப் பெரிய பொருள் மாற்றங்களைத் தொடர்களில் செய்வதற்கு வேற்றுமை உருபுகள் பெரிதும் துணையாகின்றன.

*எடுத்துக்காட்டாக, இராமன் அடித்தான் என்பது முதல் வேற்றுமை எழுவாய்த் தொடர். இவ்விரு சொற்களுக்கும் இடையே, ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு இடை வந்தால், தொடரின் பொருளே தலைகீழாக மாறிவிடுகிறது. இராமனை அடித்தான் என்ற இரண்டாம் வேற்றுமைத் தொடரில் ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு அடித்த இராமனை, அடிபட்ட இராமனாகப் பொருள் மாற்றம் செய்து விடுகிறது.*



www.saivamonline.com

இவ்வுருபுகள் தொடரில் மறைந்தும் வரும். வெளிப்பட்டும் வரும். இவற்றை முறையே வேற்றுமைத் தொகை, வேற்றுமை விரி எனக் குறிப்பர். ஓர் உருபு நிற்க வேண்டிய இடத்தில் வேறு ஓர் உருபு நின்று பொருள் மாற்றம் தருவதை வேற்றுமை மயங்கியல் எனத் தொல்காப்பியர் விளக்குவர். அண்மையிலும், சேய்மையிலும் இருப்பாரை அழைக்கும்போது தொடரில் ஏற்படும் மாற்றங்களை விளிமரபு விளக்குகின்றது. எனவே, இரண்டு,மூன்று, நான்காம் இயல்கள் வேற்றுமைத் தொடர் இலக்கணங்களை விரித்துரைப்பனவாகவே கொள்ள வேண்டியுள்ளது.

***தமிழில் வினைச் சொற்களின் இலக்கணம் இம்மொழி பேசிய இனத்தாரின் அறிவாற்றல்களுக்குச் சான்று கூறி நிற்பது.***

## பெயரும் வினையும்

அல்வழி, வேற்றுமைத் தொடர் இலக்கணங்களை முதல் நான்கு இயல்களில் விரித்துரைத்த தொல்காப்பியர், பெயர், வினை, இடை, உரி என்ற நால்வகைத் தனிச்சொற்களின் இலக்கணங்களை அடுத்து வரும் நான்கு இயல்களில் விரித்துரைக்கிறார். எழுத்துக்கள் தனித்தோ, தொடர்ந்தோ வரினும், அவை ஒரு பொருள் குறித்து வராத வெற்றொலிக் கூட்டங்கள் ஆயின், சொற்கள் ஆகா. சொற்கள் முதலில் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும். அடுத்து அவை பொருள்களை அடையாளப்படுத்தும். பொருள் விளக்கும் நிலையில் சொற்கள் வெளிப்படை, குறிப்பு என்ற இரண்டு நிலைகளில் பொருள் விளக்கம் செய்யும். பெயர்ச்சொற்கள் அவை உணர்த்தும் பொருள்கள் பற்றிய சமூக மதிப்புக்கு ஏற்ப உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், இருதிணைக்கும் பொதுவான விரவுப் பெயர் எனப் பலவாறு அமையும். அவ்வாறே வினைச் சொற்களும் திணை பால் குறித்து வரும். அவை வேற்றுமை உருபுகளை ஏற்காது. காலம் காட்டும் திறம் அவற்றுக்கு உண்டு. வினைச் சொற்களின் இறுதியில் நிற்கும் விகுதிகளின் துணையோடு திணை பால்களைத் தெளிவாக உணரலாம். வினைச் சொற்களை ஒரு மொழியின் தெளிவான சொல் வடிவங்கள் என்பதைத் தொல்காப்பியம் நன்கு விளக்கியுள்ளது. திணை பால்களை விளக்கும் நிலையில் பெயரைவிட வினைகளே தெளிவானவை. இலக்குமி என்ற பெயர்ச்சொல் உயர்திணைப் பெண்பால் போல் தோன்றினும் உறுதி செய்தல் இயலாது. அச்சொல்லைப் பயன்படுத்துபவன், தான் அன்பாக வளர்க்கும் பசுவினை இலக்குமி என்று சுட்டியிருந்தால் அதே சொல் அஃறிணையாகி விடும். ஆனால், பாடினாள் என்ற சொல்



www.saivamonline.com

குழப்பமில்லாது உயர்திணை , பெண்பால், இறந்த காலம்,ஒருமை என யாவற்றையும் காட்டும் வன்மை கொண்டது. தமிழில் வினைச் சொற்களின் இலக்கணம் இம்மொழி பேசிய இனத்தாரின் அறிவாற்றல்களுக்குச் சான்று கூறி நிற்பது.

## இடையும்-உரியும்

தனிச்சொல் இலக்கணத்தில் மூன்றாவதாக இடம் பெற்றுள்ளது இடைச்சொல். இடைச்சொற்கள் பொதுவாகப் பெயர்ச்சொற்களும் அல்ல; வினைச்சொற்களும் அல்ல. இவற்றின் வேறும் அல்ல. தனித்து இயங்க இயலாத இவை பெரும்பாலும் வினைகளைச் சார்ந்து, அவற்றின் இடையிலேயே வருதலால் இடைச்சொற்கள் எனப் பெயர் பெற்றன. எவ்வெவ்வாறு எல்லாம் இடைச்சொற்கள் அமையும் என்பதையும், சில இடைச்சொற்கள், மொழிகளின் இடையே நின்று ஏற்படுத்தும் பொருள் மாற்றங்களையும் தொல்காப்பியர் இடையியலில் எடுத்துரைத்துள்ளார். நான்காவதாகிய உரிச்சொற்கள் யாவும் ஒருவகைப் பெயர்ச் சொற்களே என்பதை உரியியல் விளக்குகிறது. இசைப் பொருண்மை, குறிப்புப் பொருண்மை, சிலவகைப் பண்புகளைக் குறித்து நின்று பெரும்பாலும், செய்யுள்களில் மட்டுமே இடம் பெறும் சொற்கள் உரிச்சொற்கள் எனப்பட்டன. கவிதைக்கு அழகு தரும் உரிச்சொற்கள். ஒரே சொல் நின்று பல பொருள்களை விளக்கும் நிலையிலும் வரும். ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் வந்தால் அவற்றில் வழக்கில் உள்ள சொல்லைத் தவிர எஞ்சிய சொற்கள் உரிச்சொற்களாகக் கொள்ளப்படும். எனவே, இவை செய்யுளுக்கு உரிமை பூண்டு வருவன என்பது விளக்கப்பட்டுள்ளது.

***இசைப் பொருண்மை, குறிப்புப் பொருண்மை, சிலவகைப் பண்புகளைக் குறித்து நின்று பெரும்பாலும், செய்யுள்களில் மட்டுமே இடம் பெறும் சொற்கள் உரிச்சொற்கள் எனப்பட்டன.***

## எச்சவியல் ஆய்வு

சொல்லதிகாரத்தின் நிறைவில், ஒன்பதாவது இயலாக அமைவது எச்சவியல். முன்குறித்த எட்டு இயல்களிலும் பேச முடியாத தனிச் சொற்கள், மற்றும் தொடர்களின் விடுபட்ட இலக்கணங்கள், இவ்வியலில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. முன்குறித்த நால்வகைச் சொற்களையே, செய்யுளில் பயன்படும் நிலையில் இயற்சொல், திரிசொல் என்று எச்சவியல் பகுத்துக் காட்டுகிறது. அனைவருக்கும் பொருள் புரியும்



www.saivamonline.com

சொற்கள் இயற்சொற்கள். கவிதைக்கு என்றே திரித்துக்கொள்ளப்பட்ட, மிகக் கற்றவர்களுக்கு மட்டுமே பொருள் விளங்கும் சொற்கள் திரிசொற்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கவிதை அழகிற்காகத் தமிழகத்தைச் சுற்றிச் சூழ்ந்துள்ள நாடுகளில் வழங்கும் மொழிகளிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் சொற்கள் திசைச் சொற்கள் என ஏற்கப்பட்டன. வடமொழி என்று தமிழர்களால் சுட்டப்பட்ட ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்திலிருந்து எடுத்தாளப்படும் சொற்கள் வடசொற்கள் என்று பெயரிடப்பட்டன. அவற்றை எடுத்தாளும்பொழுது எவ்வாறு தமிழ் ஒலியியலுக்குத் தக மாற்றி அமைத்தல் வேண்டும் என்பதையும் எச்சவியல் எடுத்துக்காட்டுகிறது. மேலும், வேற்றுமைத் தொகை முதலிய அறுவகைத் தொகைகளின் இலக்கணங்களும், சொல் விகாரங்களும், பொருள் கோள்களும் எச்சவியலில் விளக்கப்பட்டுள்ளன.

---

*அனைவருக்கும் பொருள் புரியும் சொற்கள் இயற்சொற்கள். கவிதைக்கு என்றே திரித்துக்கொள்ளப்பட்ட, மிகக் கற்றவர்களுக்கு மட்டுமே பொருள் விளங்கும் சொற்கள் திரிசொற்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கவிதை அழகிற்காகத் தமிழகத்தைச் சுற்றிச் சூழ்ந்துள்ள நாடுகளில் வழங்கும் மொழிகளிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும் சொற்கள் திசைச் சொற்கள் என ஏற்கப்பட்டன. வடமொழி என்று தமிழர்களால் சுட்டப்பட்ட ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்திலிருந்து எடுத்தாளப்படும் சொற்கள் வடசொற்கள் என்று பெயரிடப்பட்டன.*

---

## சொல்லதிகாரச் சிறப்புக்கள்

தொல்காப்பியத்தின் இரண்டாவதாக அமைந்துள்ள சொல்லதிகாரம், பெரிதும் சிறப்புக்கு உரியது. இதன் சிறப்புக் கருதியே இப்பகுதிக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர் என ஐவர் உரை வரைந்துள்ளனர். பெயர் அறியப்படாத ஆசிரியர் ஒருவர் எழுதிய உரையும் சொல்லதிகாரத்திற்கு உள்ளது. சேனாவரையர் உரையின் படி, சொல்லதிகாரத்தில் 463 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. தமிழ்ச் செய்யுள்களில் திசை மொழிச் சொற்களும், வடமொழிச் சொற்களும் இடம் பெறுவதற்கு உரிய தொல்காப்பியரின் வரையறைகள் பெரும் சிறப்புடையது. செய்யுள்



www.saivamonline.com

அழகிற்காக மட்டுமே பிறமொழிச் சொற்களை ஏற்க அவர் இசைகிறார். பேச்சு மொழியில் பிற மொழிச் சொற்கள் கலத்தலை அவர் உடன்படவில்லை. வடசொற்களைக் கையாளும்போது, வடமொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்கள் வருமிடத்தில், அந்த எழுத்துக்கு ஒத்த ஓசையுடைய தமிழ் எழுத்துக்களால் அவற்றை எழுதிக் கொள்ள வேண்டும் என்று அவர் வழிகாட்டுகிறார். வடமொழி எழுத்துக்களான ஸ,ஷ,ஜ,ஹ முதலியனவற்றை அப்படியே கலந்து எழுதுவதைத் தொல்காப்பியம் ஏற்கவில்லை. ஸர்ப்பம் என்பதை சருப்பம் என்றும், நஷ்டம் என்பதை நட்டம் என்றும், ஜனம் என்பதைச் சனம் என்றும், ஹாரம் என்பதை ஆரம் என்றும் உச்சரிக்கவும், எழுதவும் வேண்டும் என்பதே தொல்காப்பியர் ஆணை. ஏனைய எழுத்து மற்றும் பொருள் இலக்கணங்களை எல்லாம் விட சொல் இலக்கணம் ஒன்று மட்டுமே தமிழ் மொழிக்குப் பெரிதும் பயன்படவல்லது என்பது உரைகாரர் சேனாவரையர் கருத்து.

---

*செய்யுள் அழகிற்காக மட்டுமே பிறமொழிச் சொற்களை ஏற்க அவர் இசைகிறார். பேச்சு மொழியில் பிற மொழிச் சொற்கள் கலத்தலை அவர் உடன்படவில்லை. வடசொற்களைக் கையாளும்போது, வடமொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்கள் வருமிடத்தில், அந்த எழுத்துக்கு ஒத்த ஓசையுடைய தமிழ் எழுத்துக்களால் அவற்றை எழுதிக் கொள்ள வேண்டும் என்று அவர் வழிகாட்டுகிறார். வடமொழி எழுத்துக்களான ஸ,ஷ,ஜ,ஹ முதலியனவற்றை அப்படியே கலந்து எழுதுவதைத் தொல்காப்பியம் ஏற்கவில்லை.*

---

## பொருளதிகாரம்

தமிழ் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் உதவ வல்லது தொல்காப்பியப் பொருள் அதிகாரம். இப்பகுதி தொல்காப்பியர் காலத்துக்கு முன்னே தமிழில் நிலவியிருந்த தமிழ் இலக்கியங்களைத் துல்லியமாக ஆய்வு செய்து உருவாக்கப்பட்டுள்ளது. இதனை விரிவாகவும், துல்லியமாகவும் ஆராய்ந்தால் இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழில் நிலவியிருந்த வியப்பூட்டும் இலக்கியப் பரப்பை இனங்காண முடியும். தமிழ் இலக்கியங்களின் பாடுபொருள் குறித்த கட்டுப்பாடான எல்லைகளையும், தமிழ்



www.saivamonline.com

இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களையும், யாப்பில் அடைவுகளையும், அவற்றுள் கையாளப்பட வேண்டிய பாக்களின் வகைமைகளையும் தொல்காப்பியப் பொருளதிகாரம் நிரல்பட விளக்கிச் செல்கிறது. இதன் பரப்புப் பெரிது. உலகில் வேறு எந்த ஒரு மொழயிலும் இடம் பெறாத புதிய இலக்கணம் பொருளதிகாரம். தமிழர் அக, புற வாழ்வும், வாழ்வியல் பெருமிதங்களும்,தமிழர் நாகரிகக் கூறுபாடுகளும், பண்பாட்டுப் பதிவுகளும் பொருளதிகாரத்தில் நிறைந்து காணப்படுகின்றன. இளம்பூரணர் உரைப்படி இப்பகுதியில் 656 நூற்பாக்கள் உள்ளன. இளம்பூரணர் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை வரைந்துள்ளார். நச்சினார்க்கினியார் முதல் ஐந்து இயல்களுக்கும், பேராசிரியர் பின் நான்கு இயல்களுக்கும் உரை கண்டு காட்டியுள்ளனர்.

---

***இப்பகுதி தொல்காப்பியர் காலத்துக்கு முன்னே தமிழில் நிலவியிருந்த தமிழ் இலக்கியங்களைத் துல்லியமாக ஆய்வு செய்து உருவாக்கப்பட்டுள்ளது. இதனை விரிவாகவும், துல்லியமாகவும் ஆராய்ந்தால் இன்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழில் நிலவியிருந்த வியப்பூட்டும் இலக்கியப் பரப்பை இனங்காண முடியும்.***

---

## பொருள்-தொல்காப்பியமும் திருக்குறளும்

தொல்காப்பியப் பொருளதிகாரமும்,திருவள்ளுவர் கூறும் பொருட்பாலும் வேறு வேறானவை. திருவள்ளுவர் கூறும் பொருள் என்பது சமூகப் பொருளாதாரம் பற்றிப் பேசுவது. தொல்காப்பியரின் பொருளதிகாரம் தமிழ்க் கவிதைகளின் பாடுபொருள் பற்றிய ஆய்வாகும். சுருங்கச் சொல்வதானால் தமிழ்க் கவிதைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை விளக்குவது பொருளதிகாரம். தமிழ்க் கவிதைகளை, தமிழ் இலக்கியப் பரப்பினை நம் முன்னோர் இரண்டு பெரும் பகுப்பாகப் பாகுபாடு செய்தனர். ஒன்று அகம். மற்றொன்று புறம் . உள்ளத்தால் மட்டும் உணரத்தக்கதாய், வெளிப்பட உரைக்க வாராத காதல் வாழ்வைச் சித்திரிப்பது அகம். எஞ்சிய போர் முதலிய பட்டாங்குத் தோன்றும் வாழ்வைச் சித்திரிப்பது புறம். இவ்விரு பாடுபொருள் இலக்கணம் உரைக்கும் பகுதி பொருளதிகாரம் எனப்பட்டது. தொல்காப்பியரின் பொருள் இலக்கணப் பகுதி, பிற்காலத்தில் அணி இலக்கணம் என்ற பெயரில் வடமொழிச் சார்பால் விரிந்தது. தொல்காப்பியச் செய்யுள் இலக்கணக் கூறுகள் யாப்பியலாகத் தனித்து ஆராயப்பட்டது. பொருள் இலக்கணம் அகம், புறம் எனத் தனித்தனியே கிளைத்தன.


www.saivamonline.com

*உலகில் வேறு எந்த ஒரு மொழயிலும் இடம் பெறாத புதிய இலக்கணம் பொருளதிகாரம். தமிழர் அக, புற வாழ்வும், வாழ்வியல் பெருமிதங்களும், தமிழர் நாகரிகக் கூறுபாடுகளும், பண்பாட்டுப் பதிவுகளும் பொருளதிகாரத்தில் நிறைந்து காணப்படுகின்றன.*

## அகமும் புறமும்

தொல்காப்பியப் பொருளதிகாரம் அக இலக்கணத்தை அகத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டு இயல் முதலிய இயல்களால் விரித்துரைக்கிறது. களவு, கற்பு என்ற இரண்டு பெரிய ஒழுக்கங்கள் இப்பகுதியில் பேசப்பட்டுள்ளன. தொல்காப்பியம் சுட்டும் காதல் வாழ்க்கை முற்றிலும் கற்பனை சார்ந்தது அன்று. முழுவதும் நடைமுறை வாழ்வின் வெளிப்பாடும் அன்று. நாகரிகம் மிக்க அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிய காதல் வாழ்வின் மேல் கற்பனை கலந்து, நாடக உத்தியோடு வகைப்படுத்தப்பட்டுள்ளது. புறவாழ்க்கை நூற்றுக்கு நூறு நடைமுறைகளை உள்ளவாறே பேசிக்காட்டுவது. எனவே, பொருளதிகாரம் பண்டைத் தமிழர்களின் நாகரிகப் பதிவாகவே கருதப்படுகிறது.

*தொல்காப்பியப் பொருளதிகாரமும், திருவள்ளுவர் கூறும் பொருட்பாலும் வேறு வேறானவை. திருவள்ளுவர் கூறும் பொருள் என்பது சமூகப் பொருளாதாரம் பற்றிப் பேசுவது. தொல்காப்பியரின் பொருளதிகாரம் தமிழ்க் கவிதைகளின் பாடுபொருள் பற்றிய ஆய்வாகும்.*

## பொதுமைச் சித்திரிப்பு

தொல்காப்பியப் பொருளதிகாரம், அகப்பொருள் பாட முனைவார் மேற்கொள்ளவேண்டிய கவிதை எல்லைகளை மிகத்துல்லியமாகச் சுட்டுகிறது. காதல் பாடுவோர் தலைவன், தலைவி, செவிலி, தோழி எனப் பாத்திரங்களை முன்னிறுத்தி அனுமதிக்கும் பொருளதிகாரம், அவர்கள் உண்மைப் பெயரைக் குறிக்கத் தடை விதிக்கிறது. மாறுபடாத மனித மன உணர்வாகிய காதலைப் பொதுமைப்படுத்தி உரைக்க அது அறிவுறுத்துகிறது. காதல் பாடல்கள் இன்று வரை கற்பார்க்கு இனிமையும், சுவையும் தருவதற்கு இந்தப் பொதுமைச் சித்திரிப்பே காரணமாகிறது. புறப்பாடல்கள் பெரிதும் போர் குறித்து எழுந்தன. இவற்றில் தலைவன் பெயரை உள்ளவாறு பதிவு



www.saivamonline.com

செய்வதைத் தொல்காப்பியம் அனுமதிக்கிறது. அதனால்தான் சில வரலாற்று உண்மைகளை நம்மால், இலக்கியங்களின் வாயிலாகப் பெற முடிந்துள்ளது. இவ்விரு வகைப்பாடல்களையும் எவ்வகை யாப்பில் பாடலாம் என்பதையும், தொல்காப்பியம் வரையறுக்கிறது. நூல் முழுவதற்குமான சிலவகை மரபுகளையும் இப்பகுதி விரிவாகப் பேசி நிறைகிறது.

*தொல்காப்பியம் சுட்டும் காதல் வாழ்க்கை முற்றிலும் கற்பனை சார்ந்தது அன்று. முழுவதும் நடைமுறை வாழ்வின் வெளிப்பாடும் அன்று. நாகரிகம் மிக்க அன்றைய தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிய காதல் வாழ்வின் மேல் கற்பனை கலந்து, நாடக உத்தியோடு வகைப்படுத்தப்பட்டுள்ளது.*

## பழந்தமிழ் இலக்கணங்கள்

அகப் புற இலக்கணங்களில் கட்டமைப்புப் பற்றி, இவ்வளவு விரிவாகத் தொல்காப்பியம் கூறிய போதிலும், இவ்வரையறைகளை முதன்முதல் செய்தமைத்தவர் அவர் மட்டும் அல்லர். முன்னரே பலர் இவற்றுக்கான எல்லைகளை வகுத்துப் போந்துள்ளனர் என்பதைத் தொல்காப்பியமே இனங்காட்டி நிற்கிறது. தொல்காப்பிய நூற்பாக்களில், என்ப என்ற சொல் 141 இடங்களில் வருகிறது. என்ப என்பதற்கு முன்னோர் உரைத்துள்ளனர் என்பது பொருள். இதேபோல், மொழிப (மொழிந்துள்ளனர்) என 87 இடங்களிலும், என்மனார் புலவர் (என்று கூறுவர் அறிஞர்) என 74 இடங்களிலும் வருகின்றன. மேலும், புலன் உணர்ந்தோர், நேரிதின் உணர்ந்தோர், நுணங்குமொழிப் புலவர், தொன்னெறிப் புலவர், குறியறிந்தோர், தெளியுமோர் என்றெல்லாம் வரும் தொடர்கள் தொல்காப்பியருக்கு முற்பட்ட இலக்கண நூலாசிரியர் பலர் என்பதைப் பறைசாற்றுகின்றன.

*மாறுபடாத மனித மன உணர்வாகிய காதலைப் பொதுமைப்படுத்தி உரைக்க அது அறிவுறுத்துகிறது. காதல் பாடல்கள் இன்று வரை கற்பார்க்கு இனிமையும், சுவையும் தருவதற்கு இந்தப் பொதுமைச் சித்திரிப்பே காரணமாகிறது.*

## அகத்திணைப் பாகுபாடுகள்

பொருளதிகாரத்தின் முதற்பகுதி அகத்திணை இயல், களவு, கற்பு

என்ற இருவகை ஒழுக்கத்திற்கும் உரிய பொதுவான, அக இலக்கிய எல்லைகளை முன்னிறுத்துகின்றது. அகத்திணை இயல், காதல் ஒழுக்கத்தைக் கைக்கிளை, ஐந்திணை,பெருந்திணை என ஏழாகப் பகுத்துச் சுட்டுகிறது. இவை முல்லை, குறிஞ்சி,மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலப்பரப்பில் நிகழ்வன. அகப்பொருள் பாட முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூவகைப் பொருள்களைத் தொல்காப்பியம் சுட்டுகின்றது. உரிப்பொருளே அகப்பாடல்களின் தலைமைப் பொருள். அவை, புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்து. இவை அகப்பொருள் புனைவின் கண் அழகு பெறக் கருப்பொருளும், முதற்பொருளும் துணை செய்வன. முதற்பொருள் என்பன நிலமும் காலமும். கருப்பொருள் என்பன நால்வகை நிலத்திலும் நிலைபெற்றிருக்கும் பொருள்கள். கருப்பொருள் கூறவந்த தொல்காப்பியர் நால்வகை நிலங்களுக்கு உரிய கடவுளர்களையும் பதிவு செய்கிறார்.

*மாயோன் மேய காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
*வருணன் மேய பெருமணல் உலகமும்*

( தொல்.பொருள்.5)

முல்லைக்குத் திருமால் , குறிஞ்சிக்கு முருகன் , மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன் என நிலத் தெய்வங்களையும் அடையாளப்படுத்தும் இத்தகு பகுதிகள் பல்வகை ஆய்வுகளுக்கும் இடம் தருகின்றன.

---

***தொல்காப்பிய நூற்பாக்களில், என்ப என்ற சொல் 14 I இடங்களில் வருகிறது. என்ப என்பதற்கு முன்னோர் உரைத்துள்ளனர் என்பது பொருள். இதேபோல், மொழிப (மொழிந்துள்ளனர்) என 87 இடங்களிலும், என்மனார் புலவர் (என்று கூறுவர் அறிஞர்) என 74 இடங்களிலும் வருகின்றன.***

---

## புறத்திணை

இரண்டாவதாகிய புறத்திணை இயலில் புறத்திணைகள் ஏழும் சுட்டப்பட்டுள்ளன. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என்பனவற்றோடு குறிப்பு வகையால் கரந்தை, மற்றும் நொச்சித் திணைகளும் இப்பகுதியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் வெட்சி நிரைகோடல் பற்றியது. வஞ்சி மண்கோடல் பற்றியது. உழிஞை



www.saivamonline.com

மதில் அழிப்பது. தும்பை இருபெருவேந்தர் ஒரு களத்தில் போர் செய்வது. வாகை என்பது பல்வேறு துறைகளில் வெற்றி பெற்றாரைப் பாடுவது. காஞ்சி நிலையாமை குறித்தது. பாடாண் பாடப்படும் ஆண்மகனின் சிறப்புரைத்து நிறைவது. எஞ்சிய கரந்தை நிரை மீட்டும் முயற்சியாகவும், நொச்சி எயில் காக்கும் முயற்சியாகவும் சுட்டப்பட்டன. இவை யாவும் திணை மற்றும் துறைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதியில்,

*குழவி மருங்கினும் கிழவ தாகும்* (தொல்.பொருள்.82)

என்ற நூற்பா, பாட்டுடைத் தலைவனைக் குழந்தையாகக் கருதிப் பாடப்பெற்ற பிள்ளைத் தமிழ் நூல்களுக்கான முதற்குறிப்பாக அமைந்துள்ளது.

*ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப*

(தொல்.பொருள்.83)

என்ற நூற்பா, பிற்காலத்தே உலா இலக்கியங்கள் தோற்றம் கொள்ளக் காரணமாக அமைந்துள்ளது. கடைச்சங்க காலப் புறப்பாடல்கள் பலவும், தொல்காப்பியப் புறத்திணை இயல் இலக்கணத்திற்குக் கட்டுப்பட்டே பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***முல்லைக்குத் திருமால், குறிஞ்சிக்கு முருகன், மருதத்திற்கு இந்திரன், நெய்தலுக்கு வருணன் என நிலத் தெய்வங்களையும் அடையாளப்படுத்தும் இத்தகு பகுதிகள் பல்வகை ஆய்வுகளுக்கும் இடம் தருகின்றன.***

## களவியல்

மூன்றாவதாக அமைவது களவியல். தமிழ் இலக்கியங்களில் பாடப்பெறும் அகம் என்பது,

*நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*
*பாடல் சான்ற புலன்நெறி வழக்கம்*

(தொல்.பொருள்.56)

என்று தொல்காப்பியரால் குறிக்கப்படுகிறது. நாடகக் கூறும், உலகியல் கூறும் கலந்த சித்திரிப்புகளாக அகத்திணைப் புனைவுகள் அமைந்த போதும் அவை திருவள்ளுவர் முதலிய சான்றோர் உரைக்கும் அறம் பொருள் இன்பங்களுக்கு மாறுபட்டன அல்ல என்பதைக் களவியல் முதல் நூற்பா தெளிவுபடுத்துகின்றது.


www.saivamonline.com

*இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை* (தொல்.பொருள்.89)

என்பது தொல்காப்பியர் பதிவாகும். தமிழ்நாட்டில் சித்திரிக்கப்படும் களவு என்பது வேதங்களில் கூறப்படும் எண்வகை மணங்களுள் காந்தருவ வழக்கொடு ஒத்து நடையிடுவது எனத் தொல்காப்பியரால் குறிக்கப்பட்டுள்ளது. களவில் நாட்டப்படும் தலைமகனுக்குப் பெருமை (பழி பாவங்களுக்கு அஞ்சுதல்), உரன் (அறிவு) என்பன இலக்கணங்களாக உரைக்கப்பட்டுள்ளன. தலைமகளுக்கு அச்சம், நாணம், மடம் (அறிவுறுத்திய ஒன்றைப் பற்றி நிற்கும் பண்பு) என்பன இலக்கணங்களாகக் கூறப்பட்டுள்ளன. தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாகன், பாங்கன் என்ற பாத்திரங்களும், யார் யார் மட்டுமே களவில் பேசுவதற்கு உரியவர்கள் என்ற வரையறைகளும், வேறு பல இலக்கணக் கூறுகளும் இப்பகுதியில் விளக்கப்பெற்றுள்ளன. தொல்காப்பியர் களவு மற்றும் கற்புப் பகுதியில் சுட்டும் பாத்திரங்களின் கூற்று (உரை) வகைகளைத் தொகுத்தே பிற்காலத்தில், அகப்பொருள் கோவை என்ற இலக்கியவகை தோற்றம் கொண்டது.

***நாடகக் கூறும், உலகியல் கூறும் கலந்த சித்திரிப்புகளாக அகத்திணைப் புனைவுகள் அமைந்த போதும் அவை திருவள்ளுவர் முதலிய சான்றோர் உரைக்கும் அறம் பொருள் இன்பங்களுக்கு மாறுபட்டன அல்ல என்பதைக் களவியல் முதல் நூற்பா தெளிவுபடுத்துகின்றது.***

## கற்பியல்

நான்காவதாகிய கற்பியலில் திருமணம் முடித்து ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்க்கை முறைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

*கற்பெனப் படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே*
(தொல் .பொருள்.140)

எனக் கற்பிலக்கணம் பேசப்பட்டுள்ளது. கற்பில் மணச் சடங்குகள், கரணம் என்று சுட்டப்பட்டுள்ளன. தொடக்க நாள்களில் விரும்பிய ஆணும் பெண்ணும் தாமே கூடிக் கணவன் மனைவியாக வாழ்ந்தனர் என்று தெரிகிறது. ஆண்மகன் நடத்தைகளில் பொய்மையும், வழுவி நடத்தலும் தோன்றிய காலத்தில் சமூகப் பெரியவர்கள் ஊர் அறிய மணச் சடங்குகளை வற்புறுத்தினர் என்று கற்பியல் சமூக வாழ்வியல் பேசுகிறது.



www.saivamonline.com

பொருளியல் அகம் புறம் சார்ந்த பல்வேறு பொது வரையறைகளைச் சுட்டிச் செல்கிறது. காதல் வாழ்க்கையின் பெருஞ்சிறப்பாகக் கருதப்படும், அறத்தொடுநிலை (களவை முறையாக அறிவுறுத்துவது) பற்றிய வரையறைகள் பேசப்பட்டுள்ளன.

---

*களவில் நாட்டப்படும் தலைமகனுக்குப் பெருமை (பழி பாவங்களுக்கு அஞ்சுதல்) உரன் (அறிவு) என்பன இலக்கணங்களாக உரைக்கப்பட்டுள்ளன. தலைமகளுக்கு அச்சம், நாணம், மடம் (அறிவுறுத்திய ஒன்றைப் பற்றி நிற்கும் பண்பு) என்பன இலக்கணங்களாகக் கூறப்பட்டுள்ளன.*

---

## மெய்ப்பாட்டு இயல்

ஆறாவதாகிய மெய்ப்பாட்டு இயல், உளவியல் சார்ந்த காதல் வாழ்வை வெளிப்படுத்துகிறது. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை எனப்படும் எண்வகை மெய்ப்பாடுகளும், அவை தோன்றுவதற்குரிய நிலைக்களன்களும் இப்பகுதியில் விரிவாகச் சுட்டப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, நகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்கு நான்கு நிலைகளைத் தொல்காப்பியர் சுட்டுகிறார்.

*எள்ளல் இளமை பேதைமை மடன்என்று*
*உள்ளப் பட்ட நகைநான்கு என்ப*

(தொல்.பொருள். 248)

எள்ளல் என்பது பிறரை ஏளனம் செய்தல். இளமை என்பது குழந்தை பேசும் மழலை முதலாயினவற்றை. பேதைமை என்பது கேட்டதன் உண்மை உணராது மெய் எனக் கொள்ளுதல். மடன் என்பது பொருண்மை அறியாது திரியக் கொள்ளுதல். அடுத்து வரும் உவமை இயல், உவமை வகைகளையும், உவம உருபுகளையும் விளக்கி நிற்கிறது. பிற்காலத்தே அணி இலக்கணங்கள் பிறக்கத் தொல்காப்பியரின் உவமை இயலே காரணமாக அமைந்தது.

---

*தொடக்க நாள்களில் விரும்பிய ஆணும் பெண்ணும் தாமே கூடிக் கணவன் மனைவியாக வாழ்ந்தனர் என்று தெரிகிறது. ஆண்மகன் நடத்தைகளில் பொய்மையும், வழுவி நடத்தலும் தோன்றிய காலத்தில் சமுகப் பெரியவர்கள் ஊர் அறிய மணச் சடங்குகளை வற்புறுத்தினர் என்று கற்பியல் சமுக வாழ்வியல் பேசுகிறது.*

---



www.saivamonline.com

## செய்யுளியல்

எட்டாவதாகிய செய்யுளியல் தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வுக்கு அரிய பல செய்திகளைத் தந்து நிற்கிறது. தொல்காப்பியருக்கு முற்பட்ட தமிழ் இலக்கியப் பரப்பையும், அவற்றின் சிறப்பையும் உணர இவ்வியல் பெருந்துணை புரிகிறது. தொல்காப்பியப் பொருளதிகார இயல்களுள் பெரியது செய்யுளியல். இதன்கண் மட்டும் 235 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. முதலாவதாகத் தமிழ்ச் செய்யுள்களின் 26 உறுப்புக்கள் தொகுத்துச் சுட்டப்பட்டுள்ளன. தொடர்ந்து அம்மை முதலான எட்டுவகை வேறுபட்ட இலக்கிய வகைகள் குறிக்கப்பட்டுள்ளன. ஆசிரியம், வஞ்சி, வெண்பா, கலி என்ற நான்கு வகைப் பாக்கள் பற்றிய குறிப்பும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளது. மேற்குறித்த நால்வகை யாப்புக்களுள், ஒவ்வொரு கருத்தமைந்த நூலுக்கும், எவ்வகை யாப்புப் பயன் கொள்ளப்பட வேண்டும் என்பதையும் செய்யுளியல் வரையறுக்கிறது. மேற்குறித்த நான்கு பாவகைகளும் ஒரோவழி ஆசிரியப்பா, வெண்பா என்ற இரண்டுள் அடங்கும் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

## பல்வகை இலக்கிய வடிவங்கள்

அறம் , பொருள், இன்பம் என்ற மூன்றையும் மேற்குறித்த நால்வகைப் பாக்களால் பாடலாம் என்பது பொதுவான இலக்கணம். தேவர், முனிவர், ஏனையோரை வாழ்த்துவதற்கு நால்வகைப் பாக்களும் உரியன. புறநிலை வாழ்த்து என்பது ஆசிரியப் பாவானும், வெண்பாவானும் மட்டுமே பாடப்பெறும். வாழ்த்தியல் புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியுறை எனப் பலவாறாக அமையும். பல்வேறு பாவகைகளின் குறைந்த எல்லை மற்றும் மேல் எல்லைகளும் இப்பகுதியில் குறிக்கப்பட்டுள்ளன. ஆறுவகையான நூல்களுக்கு அடி வரையறை இல்லை. அவை உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பன. இவை ஒவ்வொன்றும் எப்பொருள் குறித்து வரும் என்பதையும் செய்யுளியல் விளக்கி நிற்கிறது. இவற்றை உற்று நோக்கினால் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே,தமிழில் பல்வேறு உத்திகளோடு, பலவகைப் படைப்புக்கள் நிலவியிருந்தமை தெளிவாகிறது.

## எழுவகை இலக்கியங்கள்

சிலவாகிய, மெல்லிய மொழிகளால், குறுகிய வடிவில் தொடுக்கப்படும் நூல்கள் அம்மை எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளன. திருக்குறள் இவ்வகைக்கு எடுத்துக்காட்டாகும். செய்யுட்குரிய



www.saivamonline.com

சொற்களால் அழகு மிளிரத் தொடுக்கப்படுவன அழகு எனப்பட்டன. பழங்கதைகளைப் பாடுவது, தொன்மை என்று அழைக்கப்பட்டது. ஓசை மிக்க சொற்களால் உயர்ந்த பொருளைப் பாடுவதும், பரந்துபட்ட சொற்களால் நெடிது நீட்டிப் பாடினாலும் அவை, தோல் என்று சுட்டப்பட்டன. புதியன படைத்துப் பாடிடின் அவை, விருந்து என்று அழைக்கப்பட்டன. மெல்லினத்தில் ஙகரம் நீங்க ஏனைய ஐந்து மெய்களும், இடையினத்தில் ஆறுமெய்களும் இறுதியில் வரத் தொகுப்பன, இயைபு எனப்பட்டன. உலக வழக்குச் சொற்களால் எளிதில் பொருள்புரியுமாறு தொடுப்பது, புலன் என்று அழைக்கப்பட்டது. சிலவகை எழுத்துக்கள் வாராது ஐந்து வகை அடிகளும் வரத்தொடுப்பது, இழைபு எனப்பட்டது. மேற்குறித்த பண்புகளோடு அமைந்த நூல் வகைகள் முதல் இரண்டு சங்கங்களிலும் நிலவியிருந்திருக்க வேண்டும். அவை இன்று நமக்குக் கிடைத்தில.

***உலகம் பற்றிய விளக்கம், மந்திரம் பற்றிய குறிப்பு, ஓரறிவு முதலிய உயிர்க்குலப் பாகுபாடு முதலியன பற்றிய விளக்கங்கள் பண்டைத் தமிழர்கள் பரந்துபட்ட பல்துறை அறிவாற்றலுக்குச் சான்று கூறி நிற்கின்றன.***

## மரபுகள்

மொழியின் தனித்தன்மை சிலவகை மரபுகளைச் சார்ந்தே அமையும். எழுத்து முதலிய மூன்று அதிகாரங்களுக்கும் உரிய சில மரபுகளை நிறைவாக மரபியல் பேசி நிற்கிறது. இளமைப் பெயர், உயிர் வகைகள்,உயிர் குலத்தில் ஆண்-பெண் குறித்த மரபுப் பெயர்கள், நால்வகை வருணம் குறித்த மரபு வழிப்பட்ட அடையாளங்கள், தாவர மரபுகள், நூல் மரபுகள் முதலியன இப்பகுதியில் விரித்துரைக்கப்பட்டுள்ளன. நூல்களுக்குள் வரல் ஆகாப் பத்துவகைக் குற்றங்கள், முப்பத்து இரண்டு வகை உத்திகள் முதலியனவும் மரபியலில் விளக்கப்பட்டுள்ளன. உலகம் பற்றிய விளக்கம், மந்திரம் பற்றிய குறிப்பு, ஓரறிவு முதலிய உயிர்க்குலப் பாகுபாடு முதலியன பற்றிய விளக்கங்கள் பண்டைத் தமிழர்கள் பரந்துபட்ட பல்துறை அறிவாற்றலுக்குச் சான்று கூறி நிற்கின்றன.

*நிலம் நீர் தீ வளி விசும்பொடு ஐந்தும்*
*கலந்த மயக்கம் உலகம்* (தொல்.பொருள்.635)

என்பன போன்ற பகுதிகள் குறிக்கத்தக்கன.



www.saivamonline.com